# 26-11-2024 செய்தி

## இந்திய அரசமைப்புச் சட்டம்

- இந்திய அரசமைப்புச் சட்டம் 75 ஆண்டுகளாக நீடித்து நிற்கிறது என்பது மட்டுமல்லாமல், இன்னும்கூட அதன் அடிப்படை ஷரத்துக்களில் எந்தவித மாற்றமும் இல்லாமல் தொடர்கிறது என்பதே அதன் வெற்றிக்கு எடுத்துக்காட்டு.
- 1946 ஜூலை – ஆகஸ்ட் மாதங்களில் அரசியல் நிர்ணய சபை உருவானபோது வேறு எந்தவொரு நாடும் எதிர்கொள்ளாத சவாலை அது எதிர்கொண்டது. பழைமையான நாகரிகம் என்பது மட்டுமல்ல, கலாச்சார ரீதியாக, பூகோள ரீதியாக, மொழி ரீதியாக, மத ரீதியாக பல்வேறு வேறுபாடுகளை உள்ளடக்கிய புதியதாக உருவாக்கப்டும் ஜனநாயக நாட்டுக்கான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பெரும் பொறுப்பை அந்த சபை எதிர்கொண்டது.
- அப்போது உருவான அரசமைப்புச் சட்டம் 75 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது, குடிமக்களின் உரிமை, அரச அதிகாரத்தின் அளவு, கூட்டாட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கூறுகள் ஆகியவற்றின் தேசிய கருத்தொற்றுமையின் அடையாளமாகத் திகழ்கிறது.
- ப்ரியாம்பிள் எனப்படும் அரசியல் சாசனத்தின் முகப்புரையில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை நோக்கிய இந்திய குடியரசின் பயணம் தடம்புரளாமல் தொடர்வதற்குக் காரணமாக இருக்கிறது. நமது அரசமைப்புச் சட்டம் என்பதுதான் அதன் சிறப்பு.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அழகான, இனிமையான முக்கியமான பகுதி அதன் முகவுரை, நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நான்கு அடிப்படைக் கூறுகளின் மீது கட்டமைக்கப்பட்டிருக்கிறது இந்தியா என்கிற இறையாண்மை மிக்க ஜனநாயக குடியரசின் அடிப்படை என்பதை அந்த முகப்புரை தெளிவுபடுத்துகிறது.
- இது சட்ட அமைச்சரான அம்பேத்கரால் முன்மொழியப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை. அதில் அரசமைப்புச் சட்டத்தை முடக்கிய எமர்ஜென்சி கால இந்திரா காந்தி அரசால் இணைக்கப்பட்டவைதான் சோஷலிசமும், மதச்சார்பின்மையும், அதை சமீபத்தில் உச்ச நீதிமன்றம் அங்கீகரித்திருக்கிறது.
- இந்திய அரசமைப்புச் சட்டம் உருவானபோது அதில் 389 உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். பாபு ராஜேந்திர பிரசாத் தலைமையில் அமைந்த அரசியல் சாசன சபையில் சட்ட அமைச்சராக இருந்த பாபா சாகேப் பி.ஆர்.அம்பேத்கர் ஒவ்வொரு பிரிவையும் உறுப்பினர்களின் விவாதத்துக்கு உட்படுத்தி, பெரும்பான்மை அங்கீகாரத்தின் அடிப்படையில் உருவாக்கியதுதான் நமது அரசமைப்புச் சட்டம்.
- ஒவ்வொரு பிரிவும் தெளிவாக வரையறுக்கப்பட்டதால், அளவில் பெரியது. 395 பிரிவுகளும், 8 அட்டவணைகளும் கொண்ட இந்திய அரசமைப்புச் சட்டம் 1,45,000 வார்த்தைகளை உள்ளடக்கியது.
- அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தைவிட 30 மடங்கு பெரியது என்பதும், உலகில் இருந்த அனைத்து அரசமைப்புச் சட்டங்களிலும் உள்ள முக்கியமான நல்ல அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது என்பதுதான் இதன் தனிச்சிறப்பு.
- தமிழகத்திலிருந்து பி.கக்கன், வி.எல். முனுசாமி பிள்ளை, முகமத் இஸ்மாயில் சாஹிப், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயா ஆகியோரின் பங்களிப்பு குறித்து பாபா சாகேப் அம்பேத்கர் குறிப்பிட்டதை இப்போது நினைவுகூரத் தோன்றுகிறது.
- மதராஸ் ராஜதானி உறுப்பினர்களின் பங்களிப்பு இல்லாமல் இருந்திருந்தால், இந்த அரசமைப்புச் சட்டத்தை இத்துணை நேர்த்தியாக உருவாக்கி இருக்க முடியாது.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மிகப் பெரிய சிறப்பு காலத்துக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதும், அவை நீதிமன்றத்தின் நுணுக்கமான சோதனைக்கு உட்படுத்தப்படுவதும்தான்.
- 75 ஆண்டுகளில் இந்திய அரசமைப்புச் சட்டம் 106 திருத்தங்களை எதிர்கொண்டிருக்கிறது என்பது அதன் பலவீனமல்ல, பலம், செப்டம்பர் 2023-இல் கொண்டுவரப்பட்ட 106-வது திருத்தமான மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா உள்பட, ஒவ்வொரு திருத்தமும் இந்திய குடியரசின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கான நீக்கமாக இருந்திருக்கிறது.
- அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாட்டை உறுதிப்படுத்திய 1973 கேசவானந்த பாரதி வழக்கு, அடிப்படை உரிமைகளைத் திருத்தும் உரிமை நாடாளுமன்றத்துக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்தியது.
- 1978 மேனகா காந்தி வழக்கு தனிமனித சுதந்திரத்துக்கும், உயிருக்குமான உரிமையை நிலைநாட்டியது.
- பணியிடங்களில் பெண்களின் பாலியல் துன்புறுத்தல்களுக்கு விடையளித்தது. 1997 விசாகா வழக்கு, தன்மறைப்பு நிலை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் ஒன்று, என்பதை நிலைநாட்டியது 2017 நீதிபதி புட்டாசாமி வழக்கு.
- இதுபோன்ற பல தீர்ப்புகளும், அரசமைப்புச்சட்டத் திருத்தங்களும் இந்தியக் குடியரசை உயிர்ப்புடன் நடைபோட வைத்திருக்கின்றன. ராகுல்காந்தி கூறுவதுபோல அரசமைப்புச் சட்டத்துக்கு ஆபத்து இல்லை மீண்டும் ஒருமுறை ‘எமர்ஜென்சி’ வர வாய்ப்பும் இல்லை!

## மாற்றுத்திறனாளிகள் சேவைகளுக்கு ஒருங்கிணைந்த மையம்

**6 சேவைகள்:**

- இங்கு மாற்றுத் திறனாளிகளின் உடல் மற்றும் மனம் தொடர்பான மறுவாழ்வுத் தேவைகளை நிறைவேற்றும் வகையில், சிறப்புக் கல்வி, கண் பார்வை அளவியல், கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சி, இயன்முறை, செயல்முறை மற்றும் உளவியல் ஆகிய ஆறு சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படும். இதற்காக சிறப்பு வல்லுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த மையம் முதல்வரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.
- 2023-24 கணக்கெடுப்பு பணியின்போது கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, இந்த மையத்தில் சேவைகள் வழங்கப்படும். பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

## உலகின் முதல் இணை செயற்கைக்கோள்களை ஏவும் திட்டம்

- சூரியனைப் பற்றிய ஆய்வுக்காக, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் உருவாக்கிய இணை செயற்கைக்கோள்களை, பிஎஸ் எல்வி ராக்கெட் மூலம் இஸ்ரோ விண்ணுக்கு அனுப்புகிறது.
- இதற்கு புரோபா 3 திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது. இதில் இரண்டு செயற்கைக்கோள்கள் ஒன்றுக்கொன்று இணையாக 150 மீட்டர் தூரத்தில் நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் பறந்து சூரியனின் ஒளிவட்டப்பகுதியை ஆய்வு செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்படி இரு செயற்கைக் கோள்கள் இணையாகப் பறந்து ஆய்வு செய்ய அதில் லேசர் சோன் மற்றும் ரெப்லெக்டர் கருவிகள் உள்ளன.
- இந்த இரு செயற்கைக்கோள்களையும், முதலில் 600 X 60530 கி.மீ உயரமுள்ள நீள்வட்ட சுற்று வட்ட பாதையில் நிலை நிறுத்தி. பின்னர் இணை சுற்றுவட்ட பாதையில் இஸ்ரோ நிலை நிறுத்தும்.
- செயற்கைக்கோள்கள் இணை சுற்றுவட்டப் பாதையில் வந்தவுடன், மோதல் தவிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும். தரைக்கட்டுப்பாட்டு உதவி இல்லாமல், இந்த செயற்கைக்கோள்கள் மோதலை தவிர்த்து ஒன்றுக்கொன்று இணையாக பறப்பதை உறுதி செய்யும்.

**மங்கலான சிக்னல்**

- சூரியனை பற்றி ஆய்வுக்கு ஒரே செயற்கைக்கோளில் மிகப்பெரிய கருவிகளை பொருத்த முடியாது என்பதால், இந்த இணை செயற்கைக்கோள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தொலை தூர பொருட்களில் இருந்து வரும் மங்கலான சிக்னல்களையும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்ய முடியும்.

## பாகுபாட்டை மறுதலிக்கும் அரசமைப்பு அறம்

- உலகின் மிக நீண்ட நெடிய இந்திய அரசமைப்புச் சட்டம் அரசியல் நிர்ணய அவையில் ஏற்கப்பட்டு, இன்றுடன் 75 ஆண்டுகள் ஆகின்றன. இறையாண்மை கொண்ட சோஷலிச மதசார்பற்ற ஜனநாயகக் குடியரசான இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி கருத்து நம்பிக்கை, வழிபாட்டுக்குரிய சுதந்திரம் சட்டத்தின் முன் சமத்துவமும் சம வாய்ப்புகள் தனிமனித மாண்பை வலியுறுத்தும் சகோதரத்துவம் தேகத்தின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பேணப்படும் என்று அரசமைப்பின் அடித்தளமாகத் திகழும் முகப்புரை அறிவிக்கிறது.

**அம்பேத்கர் வலியுறுத்திய சமத்துவம்**

- தனிமனித மாண்பையும் சமத்துவத்தையும் அரசமைப்பின் முகப்புரையில் அம்பேத்கர் இடம்பெறச் செய்தார்.
- ஒருவர் என்ன சாதியில் பிறந்திருக்கிறார் என்பதை அளவுகோலாகக் கொண்டே அவருடைய தகுதி வரையறுக்கப்பட்டு, அவருடைய பிறப்புரிமையான வாக்குரிமையும் இனை பிற உரிமைகளும் தீர்மானிக்கப்பட்டன.
- இதை நிராகரித்து இந்நாட்டில் பிறந்த ஒருவர் எவ்விதப் பிறவிப்பாகுபாடும் இன்றி – முற்றும் முதலுமாக – ஒரு மனிதராக அங்கீகரிக்கப்படுகிறார்: அவருக்கு ஒரு மதிப்பு இருக்கிறது. வயது வந்ததும் அவருக்கு ஒரு வாக்கு இருக்கிறது என்பதை அம்பேத்கர் ஒரு மனிதன் – ஒரு மதிப்பு – ஒரு வாக்கு என்றார். இதுவே நம் அரசமைப்புச் சட்டம் நமக்கு வழங்கிய தலைசிறந்த அங்கீகாரமாகும்.
- தம் கல்விக் கூடங்களின் பாடத்திட்டம் ஆக்கப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டபோது எழுந்த சவால்கள், நாடாளுமன்ற ஜனநாயகத்தை அரசமைப்புச் சட்டம் அடிப்படையாகக் கொண்டிருப்பதற்கான நியாயம், அரசமைப்புச்சட்டம் முன்மொழியும் அடிப்படை உரிமைகள் ஏன் எவ்வித நிபந்தனையும் இன்றி இருக்கவேண்டும். என்பதற்கான தாக்கம் பிற நாட்டின் அரசமைப்புச் சட்டங்களுக்கும் நம் நாட்டு சட்டத்துக்குமான ஒப்பீடு, 2,473 சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டதற்கான காரணங்கள், கூட்டாட்சித் தத்துவம் குறித்து தெளிவான விளக்கம், மத்திய – மாநில அரசுகளின் உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணம் என முதற்பகுதி உரை அமைந்திருக்கிறது.
- அம்பேத்கர் உரையின் பிற்பகுதி, நாம் இதுவரை கவனப்படுத்தியிராத சீவில் சமூகத்தை நெறிமுறைப்படுத்துவதற்கானது. நாம் அரசியல் ஜனநாயகத்தோடு நிறைவடைந்து விடக் கூடாது. நம்முடைய அரசியல் ஜனநாயகத்தை ஒரு சமூக ஜனநாயகமாக மாற்றியாக வேண்டும் என்று வலியுறுத்தும் அம்பேத்கர், அடித்தளத்தின் சமூக ஜனநாயகம் இல்லாது போனால், அரசியல் ஜனநாயகம் நிலைத்து நிற்காது என்கிறார்.

**அரசமைப்பு அறம்**

- அரசமைப்புச் சட்டம் அமைதி வழியில் செயல்படுத்தப்படுவதற்கு அரசமைப்பு அறம் (Constitutional morality) வரைத்தெடுக்கப்பட வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டாலும், அத்துடன் பின்னிப் பிணைந்துள்ளன. இரு செய்திகளைப் பொதுவாக ஏற்க மறுக்கிறோம் ஒன்று ஒரு நாட்டின் அரசமைப்பும் நிர்வாக அமைப்பு முறையும் நெருங்கிய தொடர்புடைய ஒத்திசைவோடு பயணிக்க வேண்டியவை மற்றொன்று, நிர்வாக அமைப்பு முறையின் வடிவத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் வழியாக, அரசமைப்புச் சட்டத்தின் வடிவத்தையே மாற்றியமைத்து, அதைச் செயலற்றதாக மாற்றிவிடக்கூடிய சாத்தியப்பாடும் இருக்கிறது. இது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக்கே எதிரானது.
- அரசமைப்பின் அடிப்படையைக் காக்கும் பொறுப்பை நமக்கு உணர்த்தும் வகையில், பாரெங்கும் நெடிதுயர்ந்து நிற்கும் அம்பேத்கரின் கரங்களில் தவழும் அரசமைப்புச் சட்டம் – சாதிய மனப்பாங்கை மறுதவித்து – அரசமைப்பு அறத்தை நம் சமூக வாழ்க்கை முறைப் பண்பாடாக வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தையே நொடிதோறும் உணர்த்துகிறது.